www.shaivism.org

தலம் திருவாலவாய்
பண் கௌசிகம்
மூன்றாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம் அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே

சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராம் அம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் தென்னன் பாண்டியற் காகவே

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராம் அம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே

சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட முர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராம் அம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டிமன் தென்னன் பாண்டியற் காகவே

நண்ண லார்புரம் முன்றெரி ஆலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யல்தமிழ்ப் பாண்டியற் காகவே

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றருள் ஆலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற் காகவே

செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாவஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லார் அமண் கைய ரிடுங்கனல்
பங்க மில்தென்னன் பாண்டியற் காகவே

தூர்த்தன் வீரந் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்தனே (1) அஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்த லாவம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற் காகவே

தாவி னான் அயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாயருள்
தூவி லா அம ணர்கொளு வுஞ்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற் காகவே

எண்டி சைக்கெழில் ஆலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராம் அம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டி மன்தென்னன் பாண்டியற் காகவே

அப்பன் ஆலவா யாதி அருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே

திருச்சிற்றம்பலம்

(1) ஆர்த்தனே

www.shaivism.org